**கவனிக்க**.- 2009.06.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1606 - 2009 ජූනි 12 වැනි සිකුරාදා - 2009.06.12

1606 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 696 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 697 |


**கவனிக்க**.- (i) எஸ். பீ. நாவின்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, சனவரி 9 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) விலங்கின நலம் பேணல் சட்டமூலம் 2009, பெப்புருவரி 6 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் எனப்படும் சட்டமூலம் 2009, பெப்புருவரி 6 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வரராரந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில்` பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூன் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு

பிரதிப் பணிப்பாளர் (சுற்றாடல் மாசு முகாமைத்துவம்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

இலங்கை விஞ்ஞான சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தர பிரதிப் பணிப்பாளர் (சுற்றாடல் மாசு முகாமைத்துவம்) பதவிக்கு தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பின்வரும் ஒரு துறையில் தகைமைகளைப் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(i) பௌதீகவியல் அல்லது கணிதத்தை உப பாடமாகக் கொண்டு இரசாயனவியலில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) இரசாயனவியல் அல்லது கணிதத்தை உப பாடமாகக் கொண்டு பௌதீகவியலில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) பௌதீகவியல், கணிதம் மற்றும் இரசாயனவியலுடன் கூடியதாக சாதாரண விஞ்ஞானப் பட்டத்தை முதலாவது அல்லது இரண்டாவது தர சித்தியுடன் பெற்றிருத்தல் ;

அத்துடன்

சுற்றாடல் அலுவல்களுடன் தொடர்புடைய ஒரு துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;

அத்துடன்

இலங்கை விஞ்ஞான சேவையின் II/II தரத்திற்குரிய வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து 10 வருட சேவைக்கால அனுபவத்தை பெற்றிருத்தல் ;

2. **சம்பள அளவுத்திட்டம்**.- அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் ரூபா 22,935-10×645-8×790 - 17×1050- ரூபா 53,555 (III, II, I தரங்களுக்கு ஏற்புடையது) பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு ரூபா 30,175 தொடக்கம் ரூபா 35,705 வரையிலான சம்பள அளவுகள் ஏற்புடையதாகும்.

3. **வயது** .- 2009.06.12 ஆந் திகதிக்கு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

4. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- மேற்படி தகைமைகளைக் கொண்ட இலங்கை விஞ்ஞான சேவையின் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரச சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் நடத்தப்படுகின்ற உள்ளமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதோடு, இங்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

I அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாகப் - உயர்ந்தபட்சம் 25 புள்ளிகள் பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு :

| | |
|---|---|
| பட்டப் பின்படிப்பு டிப்ளோமா | - 15 புள்ளிகள் |
| பட்டப் பின்படிப்பு பட்டம் | - 20 புள்ளிகள் |
| கலாநிதிப் பட்டம் | - 25 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| II | சேவை அனுபவம் (10 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தின் பொருட்டு ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம்) | - உயர்ந்தபட்சம் 30 புள்ளிகள் |
| III | ஆய்வுக் கற்கைகள் மற்றும் வெளியீடுகளின் பொருட்டு (ஒன்றுக்கு 04 புள்ளிகள் வீதம்) | - உயர்ந்தபட்சம் 20 புள்ளிகள் |
| IV | கணனி அறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறையில் பெற்றுள்ள பயிற்சிகள் (06 மாத காலத்திற்கு மேற்பட்ட பாடநெறியின் பொருட்டு ஒன்றுக்கு 04 புள்ளிகள் வீதம்) | - உயர்ந்தபட்சம் 15 புள்ளிகள் |
| V | நேர்முகப் பரீட்சை திறன்கள் | - உயர்ந்தபட்சம் 10 புள்ளிகள் |

5. **சேவை நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானதாகும் ; விதவை அநாதை/விதுரர் அநாதை ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையிலுள்ள வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாயிருக்கும்.

6. **விண்ணப்பம் அனுப்புதல்**.- கல்வி மற்றும் தொழில் தகைமைகள், அனுபவம், தற்போது வகிக்கின்ற பதவி, பதவிக்குரிய சம்பள அளவு, ஆராய்ச்சி நடவடிக்கைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள்/ வெளியீடுகள் பற்றிய விபரங்கள் உள்ளடங்கிய சுய விபரங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2009.07.10 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக, "செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள்

அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதிப் பணிப்பாளர் (சுற்றாடல் மாசு முகாமைத்துவம்)'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களது திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்களால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஏதேனும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஆட்சேர்ப்புக்கு முன்னர் வெளிப்படுமிடத்து விண்ணப்பதாரரின் விண்ணப்பதாரர் தகுதிநிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்குப் புறம்பான தகவல்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் வெளிப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை யெடுக்கப்படும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2009.05.18.

6-148

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரச சேவைகள் ஆணைக்குழு

இலங்கை பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2009

## (Competitive Examination for the Recruitment of Engineers to the Sri Lanka Engineering Service - 2009)

இலங்கைப் பொறியியலாளர் சேவையின் சிவில், பொறிமுறை மற்றும் மின்னியல் பொறியியலாளர் பதவிகளின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக 2009.04.08 ஆந் திகதிய அரச சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இதனோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பப்பத்திரங்களை 2009.07.10 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ கிடைக்கத் தக்கவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் உறையின் இடது மேல் மூலையில் "இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2009'' எனத் தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்க.-** மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.-** (i) விண்ணப்பப்பத்திரமோ அதனோடு தொடர்புடைய ஆவணமோ தபாலில் காணாமற் போனதாகவோ தாமதமாகியதெனவோ முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதைத் தாமதிப்பதன் மூலமாக நேரிடக்கூடிய இழப்புக்களையும் சேதங்களையும் விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களைத் தத்தமது திணைக்களத் தலைவரூடாக சமர்ப்பிக்க வேண்டும்.

3. அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டதாக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு இப்பரீட்சையை பின்போடவோ இரத்தச் செய்யவோ அதிகாரம் உண்டு.

4. **தகைமைகள்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தி.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த உடல்நலம் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் ஈடுபட்டுள்ள மற்றும் இங்கு 04 (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(iv)(அ) இலங்கைப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் நான்கு வருட முழுநேர ஏற்புடைய பொறியியல் பாடநெறிக்குரியதுமான விஞ்ஞானமாணி பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளத் தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பெற்றுத்தரவல்ல உரிய பொறியியல் பாடநெறிகளுடன் தொடர்புடையதாக அந்நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற பரீட்சைகளின் அனைத்துப் பகுதிகளிலும் பூரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) பட்டயப் பொறியியலாளர் அந்தஸ்தினைப் பெறும் பொருட்டு ஐக்கிய இராச்சியத்தின் பொறியியலாளர் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பெற்றுத்தரவல்ல உரிய பொறியியல் பாடநெறிகளுடன் தொடர்புடையதாக ஐக்கிய இராச்சியத்தின் பொறியியலாளர் பேரவையினாலோ அதன் இணைந்த நிறுவனமொன்றினாலோ நடத்தப்படுகின்ற பரீட்சைகளின் அனைத்துப் பகுதிகளிலும் பூரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகத்தினாலோ நிறுவனத்தினாலோ வழங்கப்பட்டதும் இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளத் தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளைக் கொண்ட விஞ்ஞானமாணி பொறியியல் பட்டத்திற்கு இணையான பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(உ) அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் நிறுவனமொன்றின் உரிய பொறியியல் பாடநெறிகளுடன் ஏற்புடைய பூரண அங்கத்துவத்தையோ உடனொத்த அங்கத்துவத்தையோ பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : மேற்காண் தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகும்போது எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- ஏற்புடைய சம்பளப் படிநிலைகளில் வினைத்திறன் காண் தடைகள் சகிதம் ரூபா 22,935-10×645-8×790-17×1,050-ரூபா 53,555 எனும் மாதாந்த அளவுத்திட்டம் இப்பதவிக்கு உரித்தாகும்.

6. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான பொது விதிகளும் நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் மற்றும் அநாதைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை வழங்க வேண்டும். மூன்று ஆண்டுகால தகுதிகாண் நிலைக் காலத்திற்குக் கட்டுப்பட்டதாகவே நியமனம் வழங்கப்படும் ;

(ii) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதோடு நியமனம் பெறுநர்கள் அரச சேவையைப் போன்ற மாகாண அரச சேவையிலும் பணியாற்றக் கட்டுப்படல் வேண்டும் ;

(iii) நியமனம் பெறுநர்கள் தீவில் பணிக்கப்படுகின்ற எப்பாகத்திலாயினும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் ;

(iv) தமக்கு வழங்கப்பட்டுள்ள பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமனம் செய்த பதவியில் அல்லது நியமனம் செய்த பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது அலட்சியப்படுத்தும் விண்ணப்பதாரிகளின் நியமனங்கள் இல்லாதொழிக்கப்படும் ;

(v) அரச சேவையில் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளினாலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1988, யூன் மாதம் 07 ஆந் திகதிய 509/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் இலங்கைப் பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதித்துள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படவுள்ள திருத்தங்களினாலும் இந்நியமனம் நிருவகிக்கப்படும்.

7. **இலங்கைப் பொறியியலாளர் சேவையின் விசேட சேவை நிபந்தனைகள்**.-

(1) பூரணமான தொழில்சார் தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்தியொருவர் நியமனத் தேதியில் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக ரூபா 26,160 (மாதாந்தம்) சம்பளப் படிநிலையில் வைக்கப்படுவர் ;

(2)ஆட்சேர்ப்புத் தரத்திலிருந்து அடுத்த தரத்திற்குப் பதவியுயர்த்தப்பட முன்னர் பூரணமான தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*8. **பரீட்சை மொழிமூலம்.**- (i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும் ;*

*(ii) பரீட்சார்த்தியொருவர் தான் மேலே 04. (IV) பந்தியில் குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றுக்கொண்ட மொழிமூலமாகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;*

*(iii) தான் மேலே 04. (IV) பந்தியில் குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்ற மொழிமூலம் அரசகரும மொழியொன்றாக அமையாதவிடத்து, அத்தகைய பரீட்சார்த்தியொருவர் அரசகரும மொழியொன்று மூலமாகவோ அல்லது ஆங்கில மொழி மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற முடியும்;*

*(iv) தனது விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.*

*9. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**-*

*(i) விண்ணப்பப்பத்திரமானது, பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்த்துள்ள மொழியிலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் தலைப்பு இல. 1.0 தொடக்கம் 4.6 வரை முதலாம் பக்கத்திலும் 5.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும் 10.0 தொடக்கம் 11.0 வரையான மிகுதி மூன்றாம் பக்கத்திலும் வரத்தக்கதாகத் தயாரித்து அதனோடு தொடர்புடைய தகவல்களை சொந்தக் கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். தன்னால் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப் பத்திரம் இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரியாலேயே அவதானிக்கப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் அமைந்தொழுகாத மற்றும் முழுமை பெறாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரங்கள் அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திரத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.*

*(ii) விண்ணப்பப் பத்திரத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க வித்தியாலயமொன்றின் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர் அல்லது அரசாங்க சேவையில் ரூபா 237,060 இற்கு மேற்பட்ட வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் ;*

*(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது ;*

*(iv) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு செய்தித்தாள் அறிவித்தலொன்று பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி கீழே குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் உடனடியாக "பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தந்திச் செய்திக்கான முகவரி : பரீட்சைகள் கொழும்பு)*

*(அ) பரீட்சையின் பெயர் ;*
*(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;*
*(இ) முகவரி ;*
*(ஈ) விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்பத்திரத்தினதும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்பிரதி ;*
*(உ) விண்ணப்பப் பத்திரம் தபாலில் இடப்பட்ட திகதியும் பதிவுசெய்த இலக்கமும் ;*
*(ஊ) கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின், அனுமதி அட்டையை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி.*

*10. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்கான கட்டணம் 300 ரூபாவாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்பு எந்தவொரு மாவட்டச் செயலகத்திலும்/பிரதேச செயலகத்திலும் பரீட்சைகள் கட்டணம் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வரவு வைக்கும் பொருட்டு செலுத்தப்படல் வேண்டும். மாவட்டச் செயலகத்திடமிருந்து/பிரதேசசெயலகத்திடமிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்தில் உரிய கூட்டில் அதன் ஓரத்தைக் கழராதவாறு ஒட்டவும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. உரிய பரீட்சைக் கட்டணத்தை மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தியிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.*

*11. **பரீட்சைத் திகதி.**- இப்பரீட்சை 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்திலோ அதற்கு முன்னரோ கொழும்பில் மாத்திரம் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

*12. பரீட்சைக்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிடக் குறைவானதாக அமையின் பரீட்சையை நடத்தாமல் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக மாத்திரம் நடாத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவினை மேற்கொள்ள அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.*

*13.* ***பரீட்சைத்திட்டம்.***- இலங்கைப் பொறியியலாளர் சேவையின் பதவிகளை எதிர்பார்த்து விண்ணப்பித்து மேலே 04. (IV) இற்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியலாளர்களின் திறன் வரிசைக்கிரமத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்துடன் இப்பரீட்சை நடத்தப்படுகின்றது. எனவே மேற்படி பரீட்சை 100% புள்ளிகளைக் கொண்ட எழுத்துமூல பொது உளச்சார்பு பரீட்சைக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. பரீட்சை வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமைவதோடு இதன் பொருட்டு 1 1/2 மணித்தியாலங்கள் வழங்கப்படும். மேற்படி பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெறுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் திறன் வரிசைக்கிரமம் தீர்மானிக்கப்படும்.

*14.* ***பரீட்சைக்கு அனுமதி அளித்தல்.***- (அ) விண்ணப்பப் பத்திரம் கிடைக்கப்பெற்றுள்ள பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்குப் பரீட்சைக்குத் தோன்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தனக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சையுடன் தொடர்புடைய அனுமதி அட்டையை முதலில் அப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற திகதியன்று அங்குள்ள நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகளால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குகள், விதிகள் என்பவற்றுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

***குறிப்பு.***- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகலவிதமான தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளாரெனும் ஊகத்தின் அடிப்படையிலேயே பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது.

*15.* ***பரீட்சார்த்தியின் அடையாளம்.***- தான் தோற்றுகின்ற பரீட்சை தொடர்பில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதன்பொருட்டு பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

*16.* ***பொய்யான தகவல் வழங்குதல்.***- ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தத் தன்மை இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம். பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் உண்மைத்தன்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

*17.* ***நியமனம் செய்யப்படுவதற்காக தெரிவுசெய்யும் முறை.***- மேலே 13 இன் பிரகாரம் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டும்.

(அ) வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்கிற்கு ஒத்த எண்ணிக்கையுடையோர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(ஆ) அரச சேவையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நேர்முகப் பரீட்சை நெறிப்படுத்தப்படுவதோடு, இங்கு பரீட்சார்த்திகளின் சான்றிதழ்கள் பரிசீலனை செய்யப்படும்.

(இ) நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ஈ) பரீட்சார்த்திகள் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அத்தகைய சந்தர்ப்பங்களில் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படுமென்பதோடு, அது இறுதியான தீர்மானமாக அமையும்.

*18.* நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செய்யப்படும் திகதியும் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களின் ஏதேனும் எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும் இங்கு ஒழுங்குவிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கவும் அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஒவ்வாமை தோன்றின் சிங்கள மொழிப் பதமே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2009.05.12.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2009**

பந்தி 8 இன் பிரகாரம் பரீட்சைக்குத்
தோற்றும் மொழிமூலம்
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

1.0 பெயர் :-

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உ-ம் :- SILVA, A. B.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர் :----.
(தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில்)

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 தொலைபேசி இலக்கம் :- நிலையானது :----.
செல்லிடம் :----.

3. விண்ணப்பிக்கும் தொகுதி :----.
(சிவில் - 1, பொறிமுறை - 2, மின்னியல் - 3)

4. 4.1 இனப் பிரிவு :-
(சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, பிற - 5)

4.2 பால் (ஆண்/பெண்) :-
(ஆண் - 0, பெண் - 1)

4.3 விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)

4.4 தேசிய அடையாள அட்டை இல. :

4.5 பிறந்த திகதி :-

ஆண்டு மாதம் திகதி

4.6 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :-

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

5.0 5.1 கல்வித்தகைமைகள் :-

(i) பட்டம் அமுலுக்கு வரும் திகதி :-----.
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவகம் :-----.
(iii) பதிவு செய்த இலக்கம் :-----.
(iv) பட்டம் :-----.
(v) பட்டப் படிப்பினை நிறைவு செய்த வருடம் :-----.
(vi) இறுதி ஆண்டின் பாடங்கள் :-----.
(vii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :-----.

5.2 தொழில்சார் தகைமைகள் (பெற்றிருப்பின்) (உ-ம் - MICE, MIE) :-----.

6.0 தற்போது வகிக்கும் பதவியும் முன்னர் வகித்த பதவிகள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :-----.
(சேவையில் சேர்ந்த திகதி மற்றும் நீங்கிய திகதிகளையும், அவ்வாறு நீங்கியமைக்கான காரணங்களையும் குறிப்பிடல் வேண்டும்)

6.1 பதவி :-----.
6.2 திணைக்களம்/ நிறுவனம் :-----.
6.3 நியமனத் திகதி :-----.
6.4 நிரந்தரமானதா/ஓய்வூதிய உரித்துடையதா/ஓய்வூதிய உரித்தற்றதா/தற்காலிகமானதா என்ற விபரம் :-----.
6.5 பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா என்ற விபரம் :-----.
6.6 பதவியின் சம்பள அளவுத்திட்டமும் தற்போது பெறுகின்ற சம்பளமும் :-----.
6.7 முன்பு வகித்த பதவிகள் பற்றிய விபரங்கள் :-----.

7.0 ஏதேனும் குற்றப் பாதகச் செயலுக்காக எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆமெனில் அக்குற்றம் என்ன என்பதையும் அதற்குக் கிடைத்த தண்டனை என்ன என்பதையும் குறிப்பிடுக :----.

8.0 காசுப் பற்றுச்சீட்டுக் கழராதவாறு அதன் ஒரு ஓரத்தில் நன்கு ஒட்டவும் :----.
(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்)

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
செலுத்தப்பட்ட அலுவலகம் :-----.
திகதி :-----.

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதி கூறுகிறேன். இதில் அடங்கியுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என தெரிவு செய்யப்பட முன் அறிய நேர்ந்தால் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின் அத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

மேலும், பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற சகல சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் என வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பபம்.

திகதி :----.

*10.0* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :

*(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 9 (ii) இன் பிரகாரம் அமைதல் வேண்டும்)*

*இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................. (முழுப் பெயர்) எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் என்பதையும் அவர் 2009 .......... ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.*

-----
*கையொப்பத்தை உறுதிப்படுத்தும்*
*உத்தியோகத்தரின் கையொப்பம்.*

*கையொப்பத்தை உறுதிப்படுத்தும்*
*உத்தியோகத்தரின் முழுப்பெயர் :*
*பதவி :*
*முகவரி :*
*(உத்தியோகபூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.)*
*திகதி :*

*11.0* **விண்ணப்பதாரி அரச சேவையில் /மாகாண அரச சேவையில் இருப்பின் திணைக்களத் தலைவரின் அறிக்கை** :

*இவ்விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் ....................................... (முழுப் பெயர்) என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்கு அறிமுகமானவர் என்பதையும் ............ ஆந் திகதியன்று அவரது மாதிரிக் கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.*

*மேலே 9.0 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும் அவரது வேலையும் நடத்தையும் ................. என்பதையும் நான் சான்றுப்படுத்துகிறேன். தற்போது வகிக்கும் பதவியில் இருந்து இவரை விடுவிக்க முடியும்/முடியாது.*

-----
*திணைக்களத் தலைவரின் கையொப்பம்.*

*பெயர் :-----.*
*பதவி :-----.*
*(உத்தியோகபூர்வ முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.)*
*திகதி :-----.*

*6-188*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.